**செப்டம்பர் – 26**


# TNPSC துளிகள்

- ஜார்ஜியாவில் நடைபெற்ற உலக சதுரங்க ஒலிம்பியாட் போட்டிக்கு சர்வதேச பிரெய்லி சதுரங்கக் குழுவின் ஒரு ஆட்டக்காரராக இந்தியாவின் முதலாவது பார்வையற்ற பெண் வீரராக சதுரங்க ஆட்டக்காரர் வைஷாலி நரேந்திர சலவ்கர் உருவெடுத்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு

- தமிழ்நாடு அரசானது வரும் நவம்பர் 1 முதல் தனது கருவூல நடவடிக்கைகளை முற்றிலும் ஆன்லைனில் கையாள முடிவு செய்துள்ளது.




- காகிதமற்ற பரிவர்த்தனைக்குள்ளாக மாறுவதற்கென மாநிலமானது ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை (IFHRMS - Integrated Financial and Human Resource Management System) அமைப்பை செயல்படுத்தவுள்ளது.
- IFHRMS ஆனது
  - விப்ரோவை (Wipro) அமைப்பு ஒருங்கிணைப்பாளராகவும்
  - அசஞ்சர் சர்வீஸஸ்-ஐ (Accenture Services) திட்ட ஆலோசனை நிறுவனமாகவும்
  - பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ்-ஐ (PriceWaterhouse Coopers) மூன்றாம் தரப்பு தணிக்கை நிறுவனமாகவும் இணைத்து செயல்படுத்தப்படவுள்ளது.

## ஹீமோகுளோபினோபதி தடுப்பிற்கான புதிய சுகாதார திட்டம்

- நாட்டின் முதன்முதலில் ஒரு முயற்சியாக மலைப் பிரதேச பகுதிகளில், ஹீமோகுளோபினோபதி தடுப்பிற்கான புதிய சுகாதாரத் திட்டத்தை தமிழ்நாடு துவங்கியுள்ளது.
- இந்த முயற்சியானது, நீலகிரி மலைப்பகுதிகள், நாமக்கல்லின் கொல்லி மலை, சேலத்தின் ஏற்காடு, கோயம்புத்தூர் (வால்பாறை) மற்றும் கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் எடுக்கப்படுகின்றன.
- ஹீமோகுளோபினோபதி என்பது ஹீமோகுளோபின் மூலக்கூறுகளில் குளோபின் சங்கிலிகளில் ஒன்றின் அசாதாரண கட்டமைப்பின் விளைவாக ஏற்படும் ஒரு வகை மரபணு குறைபாடு ஆகும்.
- இந்த நோயானது பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரிடையே அதிகமாக உள்ளது.

## அடையாறு தலைமைக் காவலருக்கு மிஸ்டர் தமிழ்நாடு பட்டம்

- ஒட்டுமொத்த மாநில உடல் கட்டமைப்பு சாம்பியன்ஷிப்பின் 80 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்று பின்னர் மிஸ்டர் தமிழ்நாடு பட்டத்தையும் அடையாறு போக்குவரத்து அமலாக்கப்பிரிவின் தலைமைக் காவலர் புருஷோத்தமன் வென்றுள்ளார்.
- இவர் 2008 ஆம் ஆண்டிலிருந்து 7 முறை மிஸ்டர் தமிழ்நாடு பட்டத்தை வென்றுள்ளார். தற்போது 10 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு இவர் இப்பட்டத்தை வென்றுள்ளார்.
- இதற்கு முன்னர் கடந்த மே 2018-ல் மிஸ்டர் சென்னை பட்டத்தை வென்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## மஹாபிஸ்-2018

- சர்வதேச வர்த்தக மாநாடு மஹாபிஸ் 2018-ன் மூன்றாவது பதிப்பு 2018ம் ஆண்டு அக்டோபர் 12 மற்றும் 13 தேதிகளில் துபாயில் நடைபெறவுள்ளது.
- மஹாபிஸ் மகாராஷ்டிரா மற்றும் வளைகுடா நாடுகள் ஒத்துழைப்பு குழுமப் (GCC – Gulf Cooperation Council) பிராந்தியங்களுக்கு இடையில் வணிக வாய்ப்புகளுக்கான ஒரு பாலமாக செயல்படுகிறது.
- GCC ஆனது மத்திய கிழக்கு நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், குவைத், ஓமன், பஹ்ரைன் மற்றும் கத்தார் ஆகிய ஆறு நாடுகள் அடங்கிய அரசியல் மற்றும் பொருளாதார கூட்டாண்மை அமைப்பு ஆகும்.

## சிறைச்சாலை சீரமைப்புக்கான குழு

- உச்சநீதிமன்றமானது நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்காக அதன் முன்னாள் நீதிபதியான


அமிதவ ராய் தலைமையிலான 3 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

- இக்குழுவானது சிறைச்சாலைகளில் உள்ள அதிகப்படியான கைதிகள் உள்ளிட்ட பிரச்சினைகளையும் ஆய்வு செய்யும் என நீதிபதி M.B. லோகுர் தலைமையிலான அமர்வு கூறியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## மதுபானம் மற்றும் உடல்நலம் குறித்த உலகளாவிய நிலை அறிக்கை - 2018

- மதுபானம் மற்றும் சுகாதார பற்றிய உலகளாவிய நிலை குறித்த அறிக்கையை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. இது மதுபானம் அருந்துவதன் விரிவான நிலையை அளிக்கிறது.
- மதுபானத்தின் அபாயகரமான உபயோகமானது 2016ம் ஆண்டில் சுமார் 3 மில்லியன் மரணங்களுக்கு காரணமாகியுள்ளது. (இது மொத்த இறப்புகளில் 5.3%) இதில் 2.3 மில்லியன் நபர்கள் ஆண்கள் என்றும் 0.7 மில்லியன் நபர்கள் பெண்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.




- இந்தியாவில் 2005-ல் 2.4 லிட்டராக இருந்த தனிநபர் மதுபான நுகர்வானது 2016 ல் 5.7 லிட்டராக உயர்ந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் WHO (World Health Orgainzation) பிராந்தியங்களில் தனிநபர் (15

வயதிற்கு மேற்பட்டோர்) மதுபான நுகர்வானது 50% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- அதிகபட்ச உயர்வானது இந்தியாவில் மட்டும் 2.2 லிட்டர் அதிகரிப்புடன் சேர்த்து தென் கிழக்கு ஆசியாவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகளாவிய அளவில் மொத்த தனிநபர் நுகர்வானது 2005 ஆம் ஆண்டில் 5.5 லிட்டர்களில் இருந்து 2010-ல் 6.4 லிட்டர் ஆக உயர்ந்தது. மேலும் இன்றும் 2016-ன் அளவான 6.4 லிட்டர் என்ற அளவிலேயே உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## சிக்கிமில் உணரி அடிப்படையிலான நிலச்சரிவு எச்சரிக்கை அமைப்பு

- நாட்டின் 2 வது உணரி அடிப்படையிலான நிலச்சரிவு எச்சரிக்கை அமைப்பு சிக்கிமில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இந்த புதிய அமைப்பு மூலம் 24 மணி நேரத்திற்கு முன்னரே நிலச்சரிவு குறித்த எச்சரிக்கையை வெளியிட முடியும்.
- இந்த அமைப்பானது கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்ட அமிர்தா விஷ்வா வித்யபீடம் (அமிர்தா பல்கலைக்கழகம்) ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.
- சிக்கிமின் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் இந்த முயற்சியானது மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தால் கூட்டு நிதியளிக்கப்படுகிறது.
- 2009-ல் அப்பல்கலைக்கழகத்தால் கேரளாவின் மேற்கு மலைத்தொடர்களில் உள்ள மூணார் மாவட்டத்தில் முதன்முதலில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு பெரிய அளவில் வெற்றியடைந்தது.

# மாநிலச் செய்திகள்

## ஸ்மார்ட் மின்னணு பொது விநியோக அமைப்பு (electronic Public Distribution System)

- நாட்டின் ஸ்மார்ட் மின்னணு பொது விநியோக அமைப்பை (e-PDS) அறிமுகப்படுத்தியுள்ள முதல் வடகிழக்கு மாநிலமாக அருணாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- இந்த அமைப்பானது மின் ஆளுமைத் திட்டங்களில் நிபுணத்துவம் வாய்ந்த மெட்ராஸ் செக்யுரிட்டி பிரிண்டர்ஸ் ஆல் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது இயங்குதிறனை மேம்படுத்துவதற்காக மையப்படுத்தப்பட்ட நிகழ் நேர ஆன்லைன் மின்னணு PDS-ஐ வழங்குகிறது.

## நரோபா திருவிழா

- லடாக் பகுதியில் நடைபெற்ற ஐந்து நாள் நரோபா திருவிழாவானது லடாக்கி நடனத்தில் கின்னஸ் உலக சாதனையுடன் முடிவடைந்தது.
- திபெத்தியன் நாள்காட்டியின் ஒவ்வொரு 12வது வருடத்திலும் கொண்டாடப்படும் இந்த திருவிழா 'இமயமலைகளின் கும்பமேளா' எனவும் அறியப்படுகிறது.




- பௌத்த துறவியான அறிஞர் நரோபாவின் போதனைகள் மற்றும் பிரசங்கங்களை இந்த திருவிழா கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டின் முடிவைக் குறிக்க 299 லடாக்கியப் பெண்கள் பாரம்பரிய உடைகளில் ஒன்றாக இணைந்து 'ஷோன்டோல்' என்ற நடனத்தை ஆடினர். இந்த பாரம்பரிய நடனமானது கின்னஸ் உலக சாதனையில் இடம்பெற்றுள்ளது.
- விழாவின் முடிவில் 'செரிங் லடோல்' என்பவருக்கு 'ஹிமாலயன் ஹீரோ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- செரிங் லடோல், 2005-ல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த லடாக்கை சேர்ந்த முதல் பெண்மணி ஆவார்.

## முதல் மிசோரம் சர்வதேச குறும்பட திருவிழா (MISFF)

- மிசோரத்தின் அய்சாலில் உள்ள அஜல் சங்கத்தில் மிசோரம் சர்வதேச குறும்பட திருவிழா (MISFF - Mizoram International Short Film Festival) முதல் முறையாக முதல்வர் லால் தான்ஹவ்லா- வால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இவ்விழாவானது
    - மிசோர மாநில அரசு
    - புதுமைகள் இந்தியா

  ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டு மிசோ திரைப்பட மன்றத்தால் ஆதரிக்கப்பட்டது.

### ஜார்சுகுடா விமான நிலையத்திற்கு பெயர் மாற்றம்

- புதிதாக கட்டப்பட்ட ஜார்சுகுடா விமான நிலையத்திற்கு சுதந்திர போராளியான வீர் சுரேந்திரசாய் என்பவரின் பெயரிடுவதற்காக ஒரிஸா சட்டசபையில் புதிய தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இது புவனேஸ்வரின் சர்வதேச விமான நிலையத்திற்கு பிஜுபட்நாயக் என பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு அடுத்து மறுபெயரிடப்படும் ஒடிசாவின் இரண்டாவது விமான நிலையமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### ககன்யான் திட்டத்திற்கு V.R. லலிதாம்பிகா தலைவராக நியமனம்

- 2022 ஆம் ஆண்டில் மூன்று மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கான பொறுப்பு மனித விண்வெளி திட்ட இயக்குநரக இயக்குனரான V.R. லலிதாம்பிகையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- இவர் 100 க்கும் மேற்பட்ட விண்வெளி திட்டங்கள் மற்றும் 2017, பிப்ரவரி 15-ல் 104 செயற்கை கோள்களை ஒரு விண்கலத்தில் ஏவிய குழுவின் ஒரு முக்கிய அங்கத்தினராகவும் இருந்த அனுபவமிகுந்தவர் ஆவார்.

## விளையாட்டுச் செய்திகள்

### சீனா ஓபன் பூப்பந்தாட்டம்

- சங்ஜோவில் நடைபெற்ற பூப்பந்தாட்டத்தில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜப்பானின் கென்டோ மோமோடாவைத் தோற்கடித்து இந்தோனேசியாவின் அந்தோனி சின்சுகா கிண்டிங் என்ற வீரர் சீன ஓபன் பட்டத்தை வென்றார்.



- சீனாவின் சென் யெஃபியை தோற்கடித்து பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் கரோலினா மரின் என்பவர் பட்டத்தை வென்றார்.
- ஜப்பான் ஓபன் பட்டத்தை கடந்த வாரம் தனது சொந்த மண்ணில் பெற்ற உலகின் மூன்றாம் நிலை வீரரான மொமோடா உலகின் 13வது இடத்தில் உள்ள கிண்டிங் ஆல் தோற்கடிக்கப்பட்டார்.

### 72வது தேசிய மூத்தோர் நீரியல் சாம்பியன்ஷிப்

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த விர்தவால் காடே 50 மீட்டர் பட்டர்ஃப்ளை நிகழ்வில் 2009 ஆம் ஆண்டு நிகழ்த்திய தனது சொந்த சாதனையை இம்முறை தானே முறியடித்து தங்கப் பதக்கம் வென்றார்.
- பெண்களுக்கான 100 மீட்டர் நெஞ்சு நீச்சல் போட்டியில் 2017 இல் சஹாத் அரோரா படைத்த சாதனையை கர்நாடகாவின் சலோனி தலால் முறியடித்து புதிய தேசிய சாதனையைப் படைத்தார்.

## முக்கிய தினங்கள்

### உலக அல்சைமர் தினம் - செப்டம்பர் 21

- உலக அல்சைமர் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 21 ஆம் நாள் உலகமெங்கிலும் கடைபிடிக்கப்படுகிறது.
- அல்சைமர் நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.




- இந்த தினம் 2012 லிருந்து கடைபிடிக்கப்படுகிறது. மேலும் செப்டம்பர் மாதம் உலக அல்சைமர் மாதமாகவும் அனுசரிக்கப்படுகிறது.
- அல்சைமர் என்பது நினைவகம் மற்றும் பிற மன செயல்பாடுகளை பாதிக்கும் பல கோளாறுகளின் குழு ஆகும்.

## உலக காண்டாமிருக தினம் - செப்டம்பர் 22

- உலக காண்டாமிருக தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 22 அன்று கொண்டாடப்படுகிறது. இது கருப்பு, வெள்ளை, பெரிய ஒற்றைக் கொம்பு, சுமத்ரான் மற்றும் ஜாவா ஆகிய 5 வகை காண்டாமிருகப் பிரிவுகளையும் கொண்டாடுகிறது.
- காண்டாமிருகத்தின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்கு உணர்த்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உலக காண்டாமிருக தினமானது 2010-ல் WWF-தென் ஆப்பிரிக்கப் பிரிவால் (Worldwide Fund for Nature) முதலில் அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவில் அசாமில் மட்டும் சுமார் 2600 காண்டாமிருகங்கள் காணப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - -